# கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு

## நாடு பூராகவும் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள இலங்கை அதிபர் சேவையின் தரம் 1 அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புதல் - 2026

2026.01.31 ஆம் திகதி வரை வெற்றிடமாகவுள்ள, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளின் அதிபர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, பொருத்தமான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் உத்தரவுக்கமைய இலங்கை அதிபர் சேவையின் தரம் 1 ஐச் சேர்ந்த தகைமையுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன

**01. தகைமைகள்**

i. இலங்கை அதிபர் சேவையின் தரம் 1 உத்தியோகத்தராக இருத்தல்.

குறிப்பு 1: விண்ணப்பப் படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு பெறுவதற்குத் தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களும் இந்தப் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், உரிய பதவி உயர்வு பெறுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். (எவ்வாறாயினும், நேர்முகப் பரீட்சையின் போது தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்ற கடிதத்தைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

ii. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழு அல்லது மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அல்லது மாகாண பிரதம செயலாளர் ஆகியோரால், அதிபர்களாக நியமிக்கப்படுவதற்குத் தகுதியற்றவர் என அறிவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.

iii. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் விண்ணப்பதாரிகள் 58 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். (ஏற்கனவே ஏதேனும் ஒரு தேசிய பாடசாலையின் அதிபர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை நிறைவேற்றுவதற்காக/ கடமை தழுவலுக்காக முறைப்படி நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அதே அதிபர் பதவிக்குப் விண்ணப்பிப்பதற்கு இந்த வயது எல்லை பொருந்தாது.)

**02. நிபந்தனைகள்**

i. **இம்முறை வெற்றிடங்களை நிரப்பும் போது, குறித்த அதிபர் பதவிகளுக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அப் பதவியில் ஆகக்குறைந்தது 3 வருடங்களாவது சேவையாற்ற வேண்டும். (மூன்று வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெறவுள்ள உத்தியோகத்தர்களுக்கு இந்த நிபந்தனை பொருந்தாது.)**

ii. **அதிபர் பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால், ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான காரணங்கள் இன்றி அப் பதவியின் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிக்க முடியாது.**

**03. விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் முறை**

i. விண்ணப்பதாரிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் விண்ணப்பப் படிவத்திற்கு அமைய A4 அளவுத் தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி, பதிவுத் தபால் மூலம் மாத்திரம் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு 2026.01.23 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"தேசிய பாடசாலை அதிபர் பதவி - இல.அ.சே. – I "** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும், அத்துடன் விண்ணப்பப் படிவங்கள் **"உதவிச் செயலாளர், கல்விச் சேவைகள் தாபனக் கிளை, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை"** எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்

ii. தங்களது அண்மையில் பெறப்பட்ட 2x2$^1/_2$ அங்குல வர்ணப் புகைப்படம் ஒன்றை விண்ணப்பப் படிவத்தின் வலது பக்க மேல் மூலையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

iii. மேலும், புள்ளி வழங்கல் திட்டத்தின் 2.1, 2.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான சேவை அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக நியமனங்கள் / இடமாற்றக் கடிதங்களைச் சமர்ப்பிக்கும்போது, அக் கடிதங்களுடன் விண்ணப்பதாரி பாடசாலை வகைப்படுத்தலுக்கு (1AB, 1C, 2, 3) அமைய குறித்த வகைப்படுத்தலுக்குரிய பாடசாலையில் உரிய காலப்பகுதியில் சேவை செய்துள்ளார் என்பதையும், குறித்த நியமனங்கள் / இடமாற்றக் கடிதங்களில் கையொப்பமிட்டவர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் செயலாளர் / மாகாண சபைகளின் கௌரவ ஆளுநர்களின் அதிகாரங்கள் ஒப்படைப்பின்படி நியமிக்கப்பட்ட நியமன அதிகாரி ஆவார் என்பதையும் மேலதிக செயலாளர் (கல்விச் சேவைகள்) / மாகாணக் கல்விப் பணிப்பாளர் எழுத்து மூலம் உறுதிப்படுத்தும் கடிதமொன்றை விண்ணப்பப் படிவத்துடன் அல்லது நேர்முகப் பரீட்சை நேரத்தில் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

iv. புள்ளி வழங்கல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்படும் அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பின்னர் பூர்த்தி செய்யப்பட்ட தகைமைகளுக்கோ அல்லது சான்றிதழ்களுக்கோ புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. மேலும், நேர்முகப் பரீட்சைத் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கடிதமோ அல்லது சேவைச் சான்றிதழோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது

**04. செயன்முறை**

i. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட இத்துடன் இணைக்கப்பட்டுள்ள புள்ளி வழங்கல் திட்டத்தின் படி, அக் குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால்

வழங்கப்படும் புள்ளிகள், விண்ணப்பதாரியின் விருப்பம், சேவைத் தேவை, விண்ணப்பதாரி சம்பந்தமாக நடைபெற்ற/ நடைபெறுகின்ற ஒழுக்காற்று நடவடிக்கைகள், பாடசாலையின் கலாசாரப் பின்னணி/ மரபுகள், கற்பித்தல் மொழி மூலம், பாடசாலை வகுதி (ஆண்/ பெண்/ கலவன்) மற்றும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஏனைய விடயங்களையும் கவனத்திற் கொண்டு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையிலும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் அதிபர் பதவிகளுக்கு நியமித்தல் மேற்கொள்ளப்படும்.

குறிப்பு 2: நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தும் திறமைக்கமைய எந்தவொரு பாடசாலையும் கிடைக்கப் பெறாத உத்தியோகத்தர்கள், வெற்றிடப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிபர் ஒருவர் தெரிவு செய்யப்படாத வேறு பாடசாலைகளுக்கு சேவைத் தேவையின் அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் உத்தரவிற்கமைய,

**நாலக களுவெவ**
**செயலாளர்,**
**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**
**2026.01.01**